**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I, தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03-ம் நாள் திங்கள் கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் ஆடித் திங்கள் 18 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.228/2024**

CNR NO.TNTJ05-003893-2024

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

நகர மேற்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.706/2022. .....குற்றமுறையிடுபவர்

//எதிர்//

சந்தனகோபாலன், வயது 33/2026, த/பெ. ராமதுரை,

107/234, வடக்கு அலங்கம், தஞ்சாவூர். ....எதிரி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 25.07.2024 அன்று சி.சி.எண்.228/2024 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, 23.07.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....,

## <u>தீர்ப்புரை</u>

I) **<u>குற்ற அறிக்கையின் சுருக்கம்-</u>**

இவ்வழக்கின் வாதி தஞ்சாவூர் காவேரி சிறப்பங்காடி எதிரில் மாலை நேரத்தில் காய்கறி கடை வைத்து நடத்தி வந்துள்ளதாகவும், சாட்சி-1க்கு உடல்நிலை சரியில்லாததால் இவ்வழக்கின் எதிரியிடம் கடை மற்றும் மேஜை ஆகியவற்றை

கொடுத்துள்ளதாகவும், கடந்த 29.05.2022 ம் தேதி மாலை 18.30 மணியளவில் வாடகை கொடு இல்லையென்றால் கடையே கொடு என்று கேட்டுள்ளதாகவும், அதற்கு எதிரி சாட்சி-1 னிடம் கடையையும் தரமுடியாது வாடகையும் தரமுடியாதுடா குச்சிகாரி மகனே தேவடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், இடது கையில் கட்டையால் அடித்து கீழே தள்ளியும், அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சத்தம் போடவும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கட்டையை காட்டி மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர மேற்கு காவல்நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீது இதச பிரிவுகள்.294(b), 324, 506(2)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது. போதிய அவகாசம் கொடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றம் பற்றி விளக்கிக் கூறி வினவப்பட்ட போது அவர் குற்றத்தை மறுத்துள்ளார். ஆவணங்களின் அடிப்படையில் கு.வி.மு.ச. பிரிவு 240(i)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட எதிரி மீது சட்டப்பிரிவுகள். 294 (b), 324, 506 (2) IPC-ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றம் பற்றி வினவியபோது குற்றம்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:29:34 +0000

செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

IV) **அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு யாதெனில்,**

IV.1) இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.1 **மகேஷ்** தனது சாட்சியத்தில் "கடந்த 29.5.2022 ம் தேதி மாலை சுமார் 6.00 மணிக்கு மேல், பசா1 வாடகை பணத்தை கேட்பதற்காக எதிரி கடைக்கு சென்றபோது, எதிரி வாடகை பணம் இல்லை என்று சொல்லியுள்ளதாகவும், பசா1 கடையை காலி செய்யுமாறு கூறியதாகவும், அப்போது இருவருகக்கு இடையே வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அப்போது பசா1 ஐ கீழே தள்ளிவிட்டு கெட்ட வார்த்தைகளால் பேசி, அருகில் கிடந்த கட்டையால் பசா1ன் காலிலும், முதுகிலும் அடித்து, முடிந்தா வாடகை பணத்தை வாங்கிகொள் என்று மிரட்டியுள்ளதாகவும், பசா1ன் கால் வீங்கியவுடன் தான் அவரை மறுநாள் தஞ்சாவூர் TMCH மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், அவர் சுமார் 1 வாரம் மருத்துவமனையில் இருந்திருப்பார் என்றும், அவர் இது சம்மந்தமாக புகார் கொடுத்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.1ன் சாட்சியத்தில் "பசா.1 தனது நண்பர் என்றும், அவரை தனக்கு 20 வருடங்களாக தெரியும் என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1ன் சாட்சியத்தை காணும்போது, வழக்கின் புகார்தாரர் பாலசுப்ரமணியன் அசா.1க்கு பலவருடகால நண்பர் என்ற முறையில் அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார் எனத்தெரிகிறது.

IV.2) அடுத்தபடியாக பார்வை மகசர் சாட்சியான அசா.2 முத்துக்குமார் தனது சாட்சியத்தில் "கடந்த 2022ம் வருடம், தேதி, மாதம் ஞாபகமில்லை என்றும்,

தஞ்சாவூர் மேலவீதியில் மேற்கு காவல்நிலைய போலீசார் வரைபடம் வரைந்ததாகவும், அதில் தானும் பெத்துராஜும் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.2 ன் சாட்சியத்தில் "தான் கையெழுத்து செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியாது" என சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 ன் சாட்சியத்தை பார்க்கையில், வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்காமலும், சம்பவம் பற்றி எதுவும் தெரியாமலும் பார்வை மகசரில் கையொப்பம் செய்துள்ளதாக அரசு தரப்பிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார் என அறியமுடிகிறது.

IV.3) இந்நிலையில் இவ்வழக்கின் புகார்தாரர் பாலசுப்ரமணியன் 25.03.2024 ல் இறந்துவிட்டதாக அரசு தரப்பில் இறப்புச்சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே சாட்சிப்பட்டியலில் 2 வதாக உள்ள சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான மகேஷ் அசா.1 ஆகவும், பார்வை மகசர் சாட்சி முத்துக்குமார் அசா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் அ.சா.1, அசா.2 அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால், அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது. அதன் காரணமாக அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பட்டியலில் உள்ள மற்ற சாட்சிகளை விசாரிக்க அவசியம் இல்லை என்று விலக்கு அளித்துள்ளார். அ.சா.3 ஆக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செந்தில்குமார் சாட்சியம் அளித்துள்ளார்.

IV.4) மேலும் அ.சா.3 திரு. செந்தில்குமார் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது

S T
KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:29:48 +0000

சாட்சியத்தில் "கடந்த 01.06.2022 ம் தேதி தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த பாலசுப்ரமணியம் என்பவரின் காயத்தகவலை பெற்று, மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த அவரிடம் நடந்த சம்பவத்திற்கு, புகார் வாக்குமூலம் பெற்று 01.06.2022 ம் தேதி 19.15 மணிக்கு குற்ற எண். 706/2022 சபி. 294(b), 324, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு, கடந்த 01.06.2022 ம் தேதி 20.15 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

IV.5) மேலும் அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரியை தேடி வந்த நிலையில் தஞ்சாவூர் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp 2842/2022, 09.06.2022 ல் முன்ஜாமீன் பெற்று சென்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை என்றும், பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தும், வாதி சிகிச்சை முழுமைபெறாமல் மருத்துவமனையிலிருந்து தன்னிசையாக வெளியேறி சென்றதால் மருத்துவர் No Opinon என சான்றளித்ததாகவும், பின்பு இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து கொண்டு சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், தனது புலன் விசாரணையிலிருந்தும் மேற்படி எதிரி குற்ற சம்பவத்தில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:29:55 +0000

ஈடுபட்டது உண்மை என தெரியவந்ததால் எதிரி மீது மேற்படி இதச பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

V) இவ்வழக்கில் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பாதகமான சங்கதிகளை குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எடுத்துக்கூறி விளக்கி வினவிய போது அரசு தரப்பு சாட்சியம் பொய் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் தெரிவித்துள்ளார்.

VI) **இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சட்டப்பிரிவுகள்.**294 (b), 324, 506 (2) IPC**-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பது தான்.**

1. சாட்சிகள், எதிரிக்கு பாதகமாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அசா.1 தனது சாட்சியத்தில் "பசா.1 தனது நண்பர் என்றும், அவரை தனக்கு 20 வருடங்களாக தெரியும் என்றும், தஞ்சாவூர் TMCH மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக பசா.1 ஐ அழைத்து சென்றதாகவும்", அசா.2 தனது சாட்சியத்தில் "தான் கையெழுத்து செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியாது என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆகவே சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என குற்றஞ்சாட்டப்பட்டவரின் தரப்பில் வாதம் முன் வைக்கப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:30:03 +0000

2. இவ்வழக்கின் புகார்தாரர் பாலசுப்ரமணியன் இறந்துவிட்டதாக அரசு தரப்பில் இறப்புச்சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசா.1, அசா.2 அரசு தரப்பிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் அசா.1 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி மற்றும் பார்வை மகசர் சாட்சி எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில், வழக்கின் மற்ற சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கின் முக்கிய சாட்சியான அசா.1 , 2 அரசு தரப்பிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளதால், மற்ற சாட்சிகளை விசாரிப்பதனால் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க வாய்ப்பு இல்லை எனவும், மற்ற சாட்சிகளை விசாரிப்பதால் நீதிமன்றத்தின் நேரம் தான் வீணாகும் என்பதனால் மற்ற சாட்சியங்களை விசாரிக்காமல் விலக்கு அளித்து அரசு தரப்பு சாட்சியங்களை முடித்துள்ளார்.

3. இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு ஆதரவாக சிறப்பு உதவி ஆய்வாளர் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவரின் சாட்சியானது தனது அரசு பணியை செய்யும் போது சொன்ன சாட்சியாகவே கருதமுடியும். ஏனெனில் அரசு தரப்பு முக்கிய சாட்சியான புகார்தாரர் இறந்துவிட்டபடியாலும், மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சி அளிக்காத நிலையிலும், காவல்துறையினரின் சாட்சியத்தை வைத்து மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி என தீர்மானிக்க முடியாது.

4. அரசு தரப்பு சாட்சியான முக்கிய சாட்சிகள் அரசு வழக்கை ஒத்து சாட்சி அளிக்காது அரசு வழக்கிற்கு மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:30:11 +0000

காவல்துறையினரின் சாட்சியம் மட்டுமே குற்றம்சாட்டப்பட்டவருக்கு தண்டனை பெற்றுத்தர போதுமான சாட்சியாக அமையவில்லை. ஆகவே அரசு தரப்பு வழக்கை போதிய சாட்சியத்தின் அடிப்படையில் அரசு நிரூபிக்க தவறிவிட்டமையால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

VII) இறுதியாக அரசு தரப்பு குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி மீது சட்டப்பிரிவுகள். 294 (b), 324, 506 (2) IPC-ன் கீழ் சுமத்திய குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியதால் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அளித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரை மேற்கண்ட பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

5. இவ்வழக்கில் சான்றுப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI

Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:30:19 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | -- | திரு. மகேஷ் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.2 | -- | திரு. முத்துக்குமார் (பார்வை மகசர் சாட்சி) |
| அ.சா.3 | -- | திரு. செந்தில்குமார் (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 01.06.2022 | பார்வை மகசரிலுள்ள அசா.2 ன் இரண்டாவது சாட்சி கையெழுத்து | அ.சா.2 |
| அ.சா.ஆ.2 | 30.05.2022 | காயத்தகவல் | அ.சா.3 |
| அ.சா.ஆ.3 | 01.06.2022 | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 01.06.2022 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 01.06.2022 | பார்வை மகசர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 01.06.2022 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 30.05.2022 | மருத்துவரின் No Opinon சான்று | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்:** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.08.03 16:30:27 +0000

**நீதித்துறை நடுவர் எண்.**I,

**தஞ்சாவூர்.**

**குறிப்பு:**

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.